


# போர் வாள்

திராவிடர் வார வெளியீடு

ஆசிரியர்கள்: காஞ்சி.மணிமொழியார், ம.இளஞ்செழியன்

திருவள்ளுவர் ஆண்டு 1979 மார்கழி 18 | வீச்சு
சென்னை, 1—1—49 | 19


# அவர்கள் சிந்தும் கண்ணீர்!

## II

ஒரு நாட்டினுடைய பொருளா ார இயந்திரம் பலமுள்ளதாகவும் றநாட்டார் கண்டு அஞ்சும் ன்மையினதாகவும் இருக்க வண்டுமானல் அந்த நாட்டின் ற்றுமதி இறக்குமதி இரண்டை ப் கூட்டிக் கழித்துப் பார்த்தால் றக்குமதியைவிட ஏற்றுமதி திகமாக இருத்தல்வேண்டும். றக்குமதி என்று சொன்னல் நாம் றநாட்டாரிடமிருந்து பொருள் ளை விலைக்குப் பெற்றுக் கொள் ரேம் என்று மட்டுமல்ல அர்த்தம், ம் அந்தக் குறிப்பிட்ட பொருள் ளுக்காக பிறநாட்டார் கையை ர்பார்த்துத் தீரவேண்டிய துர்ப் க்கியமான நிலையில் இருக்கி ரும் என்பதுதான் அதன் முழுப் பாருள். அதுவே போலத்தான், ம், சிலபல பண்டங்களை பிற ட்டார் சிலருக்கோ பலருக்கோ ற்றுமதி செய்கிறோம் என்று சால்கிறபோதும், அந்தச் லரோ பலரோ நாம் ஏற்றுமதி சய்யும் அந்தச் சிலபல பண்டங் ளுக்காக நம் தயவை எதிர் ார்க்க் கிடக்கிறார்கள் என்று கிறது. ஆகவே ஏற்றுமதி என் து ஒரு நாட்டின் பலத்தையும், றக்குமதி என்பது அந்த நாட் ன் பலக் குறைவையும் அளக்கு ட்டும் அளவுகோல்கள் என்று ம் துணிந்து சொல்லிவிடலாம். நாட்டின் ஏற்றுமதி அதிகமாக அந்த நாட்டின் பொருளாதார பலம் அதிகமாகிறது; இறக்குமதி அதிகமாக ஆக அதன் பலவீனம் அதிகமாகிறது. இது பொருளாதாரக் கலையின் பாலபாடம். நாகரிகமும் நல்லறிவும் படைத்த எந்த சர்க்காரும் இந்த பாலபாடத்தை ஒரு நாளும் மறக்காது; மறந்தொரு செயலும் புரியாது.

அமெரிக்கா இன்றைய தினம் இந்த மலர்தலை உலகம் முழுவதையுமே ஆட்டிப்படைக்கிறது என்று சொன்னல் அதற்குக் காரணம், உலகத்தில் உள்ள எல்லா நாடுகளுமே, பிரிட்டன் உட்பட, இந்தியாவும் கூடத்தான், ஒரு பண்டம் இல்லாவிட்டால் மற்றென்றிற்கு அமெரிக்காவின் தயவைக் கோரி நிற்பதுதான். ஐரோப்பாவிலே பிரான்ஸ், பெல்ஜியம், டென்மார்க், நார்வே, ஸ்விடன் முதலிய எல்லா நாடுகளும் அமெரிக்காவிடமிருந்து பல முக்கியமான பொருள்களை விலைக்கு வாங்குகின்றன. அதுபோலத்தான் ஆசிய நாடுகளும். அது போலவேதான் ஆப்ரிக்க ஆஸ்திரேலிய கண்டங்களும். இப்படி அகில உலகமும் அமெரிக்காவை எதிர்பார்த்து நிற்பதால் உலக மார்க்கட்டில், அமெரிக்காவின் இடம், புகழ் நிறைந்ததாகவும் தலை சிறந்ததாகவும் ஆகிவிட்டது. ஏற்றுமதி இவ்வளவு அதிகம் செய்கிறது அமெரிக்கா! ஆனல் இறக்குமதியோ அமெரிக்க நாட்டில் மிக மிகக் குறைவு: ஏற்றுமதி—இமயமலை அளவு! இறக்குமதி—சிறு குன்றளவு! பிறகு, கேட்கவேண்டுமா, அமெரிக்க டாலர், அகில உலகம் முழுவதும் தன் வெற்றிக் கொடியைக் கம்பீரமாகப் பறக்க விடுகிறது!

அமெரிக்கா மட்டுமல்ல உலகில் உள்ள ஒவ்வொரு நாடுமே தன் பொருளாதார பலமும் இயற்கை வளமும் தொழில்நிலை அமைப்பும் அனுமதிக்கும் அளவு ஏற்றுமதியை அதிகமாக்கவும் இறக்குமதியைக் குறைவாக்கவும்தான் விரும்புகிறது! பிறர் தன் கையை எதிர்பார்க்க வேண்டுமே தவிர தான் பிறர் கையை எதிர்பார்க்கக் கூடாது என்ற ஆசை, விருப்பம், கருத்து, ஒவ்வொரு நாட்டிற்கும் இருப்பது இயற்கை தானே! ஒவ்வொரு மனிதனுக்கும்கூட அதே ஆசை, விருப்பம், கருத்து தானே இருப்பதைக் காண்கிறோம் நாம்!

**ஏற்றுமதியை அதிகமாக்கு! இறக்குமதியைக் குறைவாக்கு!** இதுதான் ஒவ்வொரு நாடும் சாதாரணமாகப் பாடுகின்ற, பாடவேண்டிய, பொருளாதார பரணி. ஆனல் இந்தப் பரணியைப் பாடக்கூடாத ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது—மிக முக்கியமான சந்தர்ப்பம். அந்த சந்தர்ப்பத்திலும் இதே பரணியைப் பாடினல் அது குற்றம்! சாதாரண குற்றமல்ல, மன்னிக்கமுடியாத குற்றம். எதேனும் ஒரு பண்டம், நம் நாட்டில் உற்பத்தியாவது, நம் மக்களின் தேவைக்கே போதாததாக இருந்தால் அதை நாம் நிச்சயமாக ஏற்றுமதி செய்யக்கூடாது. நம் மக்களின் தேவைக்கு மிஞ்சி மிச்சமாகக் கிடைப்பதுதான், அப்படிக் கிடந்தால்தான், ஒரு பண்டத்தை நாம் ஏற்றுமதி செய்ய

(11-ம் பக்கம் பார்க்க)

# மனப் புயல்

இராதாமணாளன்

[முன்பு: குமுதினி வரிசை வரிசையாகப் பல கடிதங்களை எழுதிக்கொண்டிருந்தாள் குமாருக்கு. அவனோ அவள் மீது கொண்ட வெறுப்பால் அவற்றைப் பிரித்துக்கூடப் பார்க்கவில்லை. கடிதங்கள் வருகின்றனவே ஏன் பிரித்துப் பார்ப்பதில்லை என்று கேட்கிறாள் வேணி. குமார் சரியான பதில் தர முடியாமல் ஏதேதோ கூறுகிறான். ஐயுறு மனத்தினள் ஆகி, வேணி, பிறகோர் நாள் குமாருக்கு வந்த கடிதம் ஒன்றைப் பிரித்துப் பார்க்கிறாள், செய்தி முழுவதும் அவளுக்குத் தெற்றெனப் புலப்படுகிறது. மனப் புயலிற் சிக்கிய படகாகிறாள் மங்கை. குமாரிடம் சென்று கடிதத்தைக் கொடுத்து படி என வற்புறுத்துகிறாள், அவன் மறுக்கிறான், பிறகு படிக்கிறான்...............]

ஆருயிர் அத்தான், வணக்கம். இதுதான் நான் எழுதும் கடைசி கடிதம். அல்ல, அல்ல இது கடிதமல்ல! என் இதயக்குரலின் கடைசியொலி! பல கடிதங்கள் எழுதினேன். தினந்தினம் பதில் வரும், பதில் வருமென்று எதிர்பார்த்தவண்ணமுமிருந்தேன். ஏமாற்றமும் ஏக்கமுமடைந்தேன்.

அத்தான், தாங்கள் இப்படி முழுதும் மாறிவிடுவீர்கள் அல்லது மாற்றப்பட்டு விடுவீர்கள் என்று கனவில் கூட நான் நினைத்ததில்லை.

எனக்குக் கலியாணமான செய்தியைக் கேட்டதும், துரோகி, காதகி, ஆசைமொழி பேசிய வஞ்சகி என்றெல்லாம் என்னைப் பற்றி முடிவு செய்துவிட்டிருப்பீர்கள். கோபமும் வெறுப்பும் கொண்டு பலப்பல திட்டியிருப்பீர்கள். சோகமும் தங்கள் உள்ளத்தை வாட்டியிருக்கும், இல்லை என்று கூறவில்லை. குமுதம் ஏன் இப்படி மாறினாள் என்று அறிய முயற்சித்தீர்களா? இல்லை. அதனை விளக்கவே—நான் அபலை என்பதைத் தாங்கள் அறியவே—இக்கடிதம் எழுதுகிறேன். பசப்புகிறாள், பாசாங்குக்காரிஎன்று படிக்காமல் வீசியெறிந்து விடாதீர்கள். படியுங்கள், பிறகும் உங்கள் உள்ளம் குமுதம் துரோகிதான் என்று கூறினால், நான் உண்மையிலேயே துரோகிதான்.

வெண்ணிலா இரவில் என்னைச் சந்தித்து, இன்பமாகப்பேசி, களிப்புக் கடலில் என்னை ஆழ்த்தினீர்கள். பரவசத்தால் மலர்ந்திருந்த என் உள்ளம் வாட, பழத்தூர் செல்லப்போவதாகக் கூறி விடை கேட்டீர்கள். போக வேண்டாம் என்று வேண்டினேன். ஆபத்து ஏதாகிலும் வருமோ என்று அஞ்சி அழுதேன். கண்ணீரைத்துடைத்து ஆறுதல் கூறினீர்கள்! என் உள்ளம் துடிதுடிக்க விட்டுப் பிரிந்தீர்கள். என்று தங்களைப் பிரிந்தேனோ அன்று முதல் என் வாழ்க்கையில் புயல் வீச ஆரம்பித்துவிட்டது. என்சொல்லைத்தட்டி, தாங்கள்பழத்தூர் செல்லாதிருந்திருந்தால், இவ்வளவு தொல்லைகள் வந்திருக்குமா? நம் காதற் சித்திரக் கோட்டை சிதறி சின்னாபின்னமாகி தரைமட்டமாகி யிருக்குமா?

"பார் அம்மா இதனை" என்று ஒரு பத்திரிகையை என்னிடம் அப்பா கொடுத்துவிட்டு வெளியே சென்றார். செய்திகளை அங்குமிங்குமாகப் படித்தேன். என் இதயத் துடிப்பே நின்றுவிடும் போல் ஆகிவிட்டது, தாங்கள் ஜமீன்தாரைக் கொலை செய்துவிட்டு மறைந்துவிட்டீர் என்ற செய்தியைக்கண்டதும். என்ன செய்வதென்றே புரியாது கண்ணீர் விட்டேன். அழுதேன், கதறினேன், நாட்கள் ஓடிக் கொண்டே இருந்தன. தங்களிடமிருந்து ஏதாகிலும் தகவல் கிடைக்காதா என்று துடிதுடிக்கும் உள்ளத்தோடு காத்துக் கொண்டிருந்தேன்.

சோலையூரிலிருந்து வந்திருந்த சிவனிடம் பழகியதிலிருந்து, அப்பாவின் மனம் புதிய மாற்றத்தை அடைந்துவிட்டது. என்னை அவருக்கு மனைவியாக்கிவிட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டார். அதற்கேற்றாற்போல, சிவன் மனைவி மனோரமாவும் இறந்தாள். சிவன் காசநோயால் பீடிக்கப்பட்டிருந்தும், அவரை மறுமணம் செய்து கொள்ளும்படி அவர் தாய் பலவந்தப் படுத்தினாள். பெண் தருவதாகவும் என் தந்தை இசைந்தார். நான் மறுத்தேன். அவர் கால்களைக் கட்டிக்கொண்டு அழுதேன். அவர் மனம் சிறிதும் இளகவே இல்லை. ஒருநாள் விஷக் கிண்ணத்தை கையில் எடுத்துக் கொண்டுவந்து "ஏனம்மா, உனக்கு யார் வேண்டும்? கொலைகாரன் குமாரா அல்லது கண்ணீர் சிந்தும் உன் தந்தையா?...உடல் வெந்து துடித்து இறக்கப்போகும் உன் தந்தையை மீட்கப்போகிறாயா? அல்லது குமார் தான் தேவை என்று கூறப்போகிறாயா? இரண்டில் ஒன்றை விரைவாக இப்பொழுதே கூறிவிடு..." என்று என் தந்தை கண்களில் நீர் ததும்ப, ஆத்திரமும் ஆவேசமும் கொண்ட குரலில் வினவினார். என் உடலும் உள்ளமும் நடுங்கின. என்னசெய்வதென்றே தோன்றாது தத்தளித்தேன். "தந்தையோ பிடிவாதக்காரர். தாம் சொன்னதை ஆத்திரத்தில் செய்தே காட்டி விடுவார்! கோபம் தணிந்ததும் எப்படியும் சரி செய்து விடலாம்" என்று நம்பி, அப்பொழுது "சரி" என்றேன். கடைசிவரைக்கும் அவர் பிடிவாதம் தளரவே இல்லை. வேறு வழி இல்லாமல் சிவனுக்கு மனைவியானேன். மனப்புயலில் சிக்கி நான் உருக்குலைந்து கொண்டிருந்த நேரத்தில் அவர் இறந்தார். நான் விதவையானேன்.

ஜமீன்தார் கொலை வழக்கை பத்திரிகையில் விடாது ஆவலோடு படித்துவந்தேன். தாங்கள் விடுதலையான செய்தியை அறிந்ததும், அத்தான், என் உள்ளம் உவகையால் எவ்வளவு துள்ளியது தெரியுமா? "குமுதம்" என்று ஓடோடியும் வந்து என்னை அணைத்து, ஒளி இழந்த என் வாழ்விற்கு ஒளி சேர்ப்பீர் என்று நம்பினேன். அதே நினைவால் நொடிக்கு நொடி என் மனம் பூரித்துப் பருத்தது!

மூன்று நாட்களாகியும் தாங்கள் என்னை நாடிவராததனால் ஏக்கமும் திகிலுமடைந்தேன். நம் காதற் கோட்டை இடிந்து சரிந்து விழும்படி செய்தவர் என் தந்தை. இடிந்தகோட்டையைப்புதுப்பித்து, அழகு படுத்த அவரே முன் வந்தார். தங்களைத் தேடிக்கொண்டு பழத்தூர் வந்தார். ஏமாற்றமு

அவமானமும் அடைந்து சோகத்தோடு வீடு திரும்பினார். உடைந்த உள்ளத்தோடு, வேணியின் காதல் வலையில் தாங்கள் வீழ்ந்துவிட்டதாகத் தயங்கித் தயங்கிக் கூறினார். வேணி என்ற பெயரைக்கேட்டதும் என் தலை சுற்றியது. நிலை தடுமாறி கீழே சாய்ந்தேன்.

சோகச் செய்தியைக் கேட்டது முதல் சொல்லொணா துக்கத்தில் ஆழ்ந்தேன். இரவும் பகலும் எந்நேரமும் என் கண்கள் நீரின் ஊற்றாகவே இருந்தன. நானே கடிதம் எழுதினால் தாங்கள் நிச்சயம் வருவீர்கள் என்றெண்ணி கடிதம் எழுதினேன். பல கடிதங்கள் அனுப்பினேன். வேணியால் கவரப்பட்ட தாங்கள் இனி திரும்ப மாட்டீர்கள் என்று பிறகுதான் அறிந்துகொண்டேன். அறிந்த பிறகும் நான் ஏன் வாழவேண்டும், அத்தான்?

இறப்பதற்கு முன்பு தங்களை ஒருமுறை கண்ணாரக் கண்டு மன ஆறுதல் பெற வேண்டுமென்று நினைத்தேன். அதைக் குறிப்பிட்டும் முடங்கல் விடுத்தேன். அந்தக் கடிதமும் தங்கள் உள்ளத்தைத் தொட்டதாகத் தெரியவில்லை.

நான் உடல், நீங்கள் உயிர்; நான் வீணை, நீங்கள் மேவும் விரல்; நான் நிழல்; நீங்கள் ஒளி; நான் மலர், நீங்கள் மணம் என்றெல்லாம் எண்ணினேன். தேனும்—பாலும், கனிரசமும் கற்கண்டும் சேர்ந்தாற்போல் இன்ப வாழ்வு நடத்தலாமென்று ஆசையோடு எதிர்பார்த்தேன். என்னைக்கட்டி அணைத்து முத்தம் தந்து மெய்மறக்கச் செய்த இன்ப இரவுகள் திரும்பவரும் என்று காத்திருந்தேன். மணப்பந்தலின் கீழ் தாங்களும் நானும் கணவனும் மனைவியுமாவோம் என்று நம்பினேன். ஆவியைக் கொள்ளைகொண்ட ஆருயிர் அத்தான், இன்று நம்பிக்கை இழந்து, இதயம் பிளந்து, ஆதரவற்ற அனாதையாக நிற்கிறேன். சிறகொடிந்த பறவையாக, குரலிழந்த குயிலாக, காலொடிந்த மயிலாக ஆகிவிட்டேன் நான்.

வாட்டம் நிறைந்த வாழ்வு இனி எனக்கு வேண்டாம். எந்த விஷக் கிண்ணத்தைக் காட்டி என் தங்கை என் வாழ்வைப் பாலைவனமாக்கினாரோ, அதே விஷக் கிண்ணத்திடம் தஞ்சம் புக முடிவு செய்துவிட்டேன். ஆம், நஞ்சுண்டு நான் இறக்க நிச்சயித்துவிட்டேன். இக்கடிதம் தங்கள் கையில் சேர்வதற்கும் என் ஆவி உடலை விட்டுப் பிரிவதற்கும் சரியாகவிருக்கும்.

என் நெஞ்சம்—பேதைப் பெண்ணின் நெஞ்சம்—இந்தக் கடைசி நேரத்திலும் தங்கள் முகத்தை ஒருமுறை காணத் துடியாய்த் துடிக்கிறது!

கண்ணின் ஒளியே, நான் பிரிகிறேன். நான் அபலை, அதனை மட்டும் தாங்கள் நம்புங்கள் அத்தான், அது போதும் எனக்கு. என்னைத் தாங்கள் உதாசீனம் செய்துவிட்ட போதிலும் தங்களிடம் நான் கொண்டுள்ள ஆசையில் அணுவளவும் குறையவில்லை. விஷமருந்தி என் வாய் ரத்தத்தைக் கக்கும்போதும் அத்தான் அத்தான் என்று சொல்லிக் கொண்டேதான் இருக்கும். ஓவியம் உயிர்பெற்றுலாவுவதைப் போல என் உள்ளத்தில் உலாவிக் கொண்டிருக்கும் தங்கள் திரு உருவை, மனக் கண்முன் கண்டு ரசித்துக்கொண்டேதான், என் உயிர் பிரியும்.

எழுத கை நடுங்குகிறது. நினைவு தடுமாறுகிறது. தாங்களும் தங்கை வேணியும் ஒன்றாக நன்றாக வாழ்ந்திருங்கள்! வேணிக்கு என் ஆசி! தங்களுக்கு என் கடைசி வணக்கம்!

கனவிலும்—நினைவிலும்
தங்களை மறவாத
**குமுதம்.**

குமுதத்தின் பிளந்த இதயத்திலிருந்து கொட்டிய இந்த இரத்தத் துளிகளைக் கண்டதும், குமாரின் கண்களிலிருந்து இரத்தக் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடியது! தூரத்திலிருந்த தான் தீட்டிய பயங்கரமான ஓவியத்தை எட்டி எடுத்தான், கொட்டும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு உள்ளத்தை வேதனை கசக்க, உடல் தளர்ந்து தட்டுத் தடுமாறி கீழே உட்கார்ந்தான்.

சோர்ந்து அமர்ந்தவனின் கண்கள் அச் சித்திரத்தைக் கூர்ந்து கவனித்தன!......... சூறாவளியின் கோரத் தாண்டவத்தால் பொங்கியெழும் பெரும் பெரும் அலைகள்! மலையென உயர்ந்தெழுந்து வீழ்ந்த அலைகளின் கொடூர கொந்தளிப்பில் சிக்கி உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த இளம் பெண்!..........ஓவியத்தின் இப்பகுதியைக் கலைஞனின் விழிகள் மிரள மிரளப் பார்த்தன. "குமு—தம்! குமு—தம்! துரோ—கி!" என வார்த்தைகள் உடைந்து சிதறி அவன் உதடுகளிலிருந்து நழுவி கீழே உதிர்ந்தன!

வேல் விழிகளில் கசிந்து ஓடிக்கொண்டிருந்த கண்ணீரைப் பொன் விரல்களால் துடைத்துக் கொண்டு, பவள இதழ் திறந்து "அத்தான்" என்றாள், தழ தழத்த குரலில் வேணி. ஏக்கத்தோடு தையலை தலை நிமிர்ந்து நோக்கினான், குமார். குமுதம்—வேணி இரு உருவங்கள் ஒன்றோடு ஒன்று மோதி மோதி போரிட்டுக் கொண்டிருந்தன, குமாரின் உள்ளத்தில்! குமுதம்—வேணி இரு பெண்களில் எவள் வேண்டும்? — அதுதான் அவனால் முடிவு செய்ய முடியவில்லை. பற்களைக் கடித்துக் கொண்டு தலையை இப்படியும் அப்படியும் அசைத்துப் பார்த்தான்! இருவரில் எவளையும்விட அவன் மனம் ஒப்பவில்லை, சகிக்கவில்லை! வெளியில் சோ வென மழை விடாது பெய்து கொண்டிருந்தது! வானத்திலிருந்து பொழிந்த தண்ணீர் அதிகமா? அவன் கண்களிலிருந்து கொட்டிய கண்ணீர் அதிகமா? சொல்லமுடியாது. புயலில் சிக்கி, நிலைதடுமாறி அழிவு நோக்கி அந்நேரத்தில், நகர்ந்து கொண்டிருந்தது உலகம்! மனப்புயலில் சிக்கி, தெளிவு இழந்து குழப்பமடைந்து, பயங்கரமான படுபாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருந்தான் குமார்!

உன்னிடம் இன்பம் பெற்று, இயற்கை தேவியின் திருநடனத்தால் நிகழ்ந்துவிட்ட சில நிகழ்ச்சிகளால் துன்படைந்து, உன் சஞ்சல மனமறிந்து உள்ளம் உடைந்து பாழும் விஷம் அருந்தி ஆவி நீக்கப் போகும் அபலை குமுதம் தேவையா, அமைதியான கன்னி உள்ளத்தில் நீ காதல் விதை தூவ, பெண்மை எனும் உரத்தையும் இளமை எனும் நீரையும் அன்பு எனும் சூரிய ஒளியையும் துணைகொண்டு அது முளைத்து, செடியாகி, மரமாகி, பூத்து காயாகி கனியாகும் நேரத்தில், உரிமையோடு அதனை உண்டு சுவைத்து இன்புற, கொடிபோல் இதோ நிற்கும் இளங்குமரி வேணி வேண்டுமா? — அவன் மனதிலெழுந்த புயலோடு [illegible] இந்தக் கேள்வி ஒலியும் திரும்பத் திரும்ப இடி இடித்தாற்போல் அதிக கூச்சலிட்டு எழுந்தது!

(10-ம் பக்கம் பார்க்க)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை, மூன்று மூட்டைகள் மிச்சமாகக் கிடக்கும்போது, "மிச்சமாக ஒரு மூட்டைகூட இல்லை—இங்குள்ளவர்களுக்கே துணி வகைகள் போதவில்லை" என்று பொய்யுரையும் புகலத் தொடங்கிவிட்டனர். ஜவஹர் சர்க்கார் செப்பும் பொய் எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை நன்கு விளக்குகின்றன முதல் மூன்று படங்கள்.

கைத்தறி ஜவுளிகளின் ஏற்றுமதியை சர்க்கார் அடியோடு தடுத்துவிடவில்லை! திருஷ்டி பரிகாரம்போல ஒரு சின்னஞ்சிறு அளவு ஜவுளியினை ஏற்றுமதி செய்யவும் அனுமதித்திருக்கிறார்கள் அந்த அளவு எவ்வளவு பரிகாசத்துக்கு இடமாகும் வண்ணம் சிறியதாக இருக்கிறது என்பதைத்தான் நான்காவது படம் விளக்குகிறது. மிச்சமாகக் கிடக்கின்றன அல்லவா மூன்று மூட்டைகள் அந்த மூன்று மூட்டைகளையும் ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்திருக்க வேண்டியதுதான் முறை. மூன்று மூட்டைகளை அனுமதி செய்திராவிட்டாலும் இரண்டையேனும் அனுமதித்திருக்கலாம். அதுவும் இல்லையேல் ஒரு மூட்டையையேனும் அனுமதித்திருக்கலாம். ஆனால் இந்த ஊராள வந்த உத்தமர்களோ ஒரு மூட்டையைக்கூட முழுசாக ஏற்றுமதி செய்ய அனுமதிக்கவில்லை! ஒரே ஒரு மூட்டையின் ஒரு சிறு அளவு ஜவுளிகளையே ஏற்றுமதி செய்யலாம் என்று "பெரிய மனது" வைத்து "புதிய பிரகடனம்" செய்துள்ளனர்! நான்காவது படத்தில், முதல் மூட்டையில் ஒரு சிறு பகுதிக்குமட்டும், கறுப்பு நிறம் பூசப்பட்டிருக்கிறதல்லவா அந்த அளவுதான் சர்க்கார் அனுமதி தந்துள்ள மாபெரும் பகுதி!

இடையே ஒரு சிறு விளக்கம். இந்தப் படங்களில் ஒரு மூட்டை என்று போடப்பட்டிருக்கும் உருவம் ஒவ்வொன்றும் 10 கோடி கெஜம் துணிகள் கொண்ட ஒரு மூட்டையைக் குறிப்பிடுகிறது—நாலாறு பத்து துணிகளைக் கொண்ட சிறு மூட்டையை அல்ல! இந்த விளக்கத்தைக் கொண்டு பார்த்தால் மொத்த உற்பத்தி 15 மூட்டைகள் என்பது 150 கோடி கெஜம் என்றும், மொத்த தேவை 12 மூட்டைகள் என்பது 120 கோடி கெஜம் என்றும், மிச்சம் 3 மூட்டைகள் என்பது 30 கோடி கெஜம் என்றும், நான்காவது படத்தில் காணப்படும் சிறு அளவு 3 கோடி கெஜம் என்றும் ஏற்படும்.

இப்போது நான்கு படங்களையும் ஒருசேர முன் வைத்துக் கவனித்துப் பாருங்கள், சர்க்காரின் போக்கு எவ்வளவு முறைகேடானது என்பது தெள்ளிதின் விளங்கிவிடும். முதல் படம்—மொத்த உற்பத்தி. இரண்டாவது படம்—மக்களின் தேவை. மூன்றாவது படம் மார்க்கட்டில் மிச்சமிருக்கும் ஜவுளிகள். நான்காவது படம் மிச்சம் இருப்பதில் ஏற்றுமதிக்கு சர்க்கார் அனுமதி தந்துள்ள அளவு! நான்கு படங்களையும் பார்க்கப் பார்க்க நமக்கு எவ்வளவு வெட்கம் பிறக்கிறது இந்த சர்க்காரின் மதியற்ற செயல் கண்டு! ஆனால் இந்த சர்க்காருக்கோ வெட்கம் துளியளவும் பிறக்கக் காணோம்! இவ்வளவு அதிகமான ஜவுளிகள் நாட்டில் முடங்கிக்கிடக்கின்றன வாங்குவாரின்றி! ஆனால் சர்க்கார் கூறுகிறது செருக்குடன், நாட்டிலே உற்பத்தியாகும் கைத்தறித்துணிகள் நாட்டுமக்களுக்கே போதவில்லை—ஏற்றுமதிக்கு அனுமதிப்பது யாங்ஙனம் என்று! சே! இந்த சர்க்காருக்கென்ன கண் குருடா இப்படி கண்ணெதிரில் காணும் உண்மையையும் மறைத்துக்கூற! 30 கோடி கெஜம் மார்க்கெட்டில் தேங்கிக் கிடக்கிறது! இவர்களோ, அதில் 3 கோடி கெஜத்தை மட்டும் ஏற்றுமதி செய்ய அனுமதித்து விட்டு 27 கோடி கெஜத்தை இங்கேயே தேங்கிக்கிடக்க விட்டதோடில்லாமல் பற்றாக்குறை உள்ளதென பொய்வேறு புகல்கிறார்கள்! இந்த சர்க்காரின் செயலாலே இவ்வளவு ஜவுளிகள் இங்கே முடங்க, முடங்கியதன் விளைவாக ஜவுளிகளின் விலைகள் மடமடவென இறங்க, இறங்கிய காரணத்தால் பசி பசியென கை நெசவுத் தொழிலாளர்கள் வேதனையால் துடிக்கிறார்களே அந்தத் துடிதுடிப்புக்கு, வேதனைக்கு, பசிக்கொடுமைக்கு, ஆளவந்தார்கள் அச்சமின்றி அரற்றும் இந்தப் பொய்யுரையா மருந்து! வெட்கந்தான் இல்லையென்று சொன்னாலும் இந்த டில்லி சர்க்காருக்கு, "துக்கப்படும் தொழிலாளர்தம் துயரத்தைத் துடைக்காது நாம் வெந்த புண்ணில் வேல் எறிவதுபோல அவர்களைப் பார்த்து இங்ஙனம் பொய்யுரை புகல்வது ஆகுமா" என்று எண்ணிப் பார்க்கும் மனிதப் பண்புகூடவா இல்லாமல் போய்விட்டது?

* * *

ஏற்றுமதி செய்ய வேண்டிய கைத்தறி ஜவுளிகளை வேண்டுமென்றே முடக்கிவைத்துவிட்டு, இந்த முடக்கத்தின் காரணமாகப் பசிக்கொடுமையை ருசி பார்க்கும் பாட்டாளிகள் ஏன் இந்தக் கொடுமை என்று கேட்கிறபோது பற்றாக்குறை உள்ளதென்று மனமறிந்து பொய் பேசுகிறார்களே இந்த சர்க்கார், இதற்கென்ன காரணம்?

தேவைக்கு மேல் பண்டம் இங்கே குவிந்துகிடக்கிறது என்பது இவர்களுக்குத் தெரியாதா? தெரியாது என்று சொல்வதற்கில்லை—நம்மைப் போன்ற சாதாரணப் பொதுமக்களுக்கும் தெரிந்துள்ள புள்ளி விவரங்களா இந்தப் பாரத துணைக் கண்டத்தின் மகத்தான சர்க்காருக்குத் தெரியாமல் இருக்கமுடியாது.

ஏற்றுமதித் தடையின் விளைவாக நாட்டிலே, ஏழை நெசவாளர்கள் வீட்டிலே, பசியும் பஞ்சமும் கோர நடனம் புரிகின்றன என்பதை இவர்கள் அறியார்களா? அறியார்கள் என்றும்கூற முடியாதே—அடிக்கடி நெசவாளர்களின் பிரதிநிதிகள் இவர்களைச் சென்றுகண்டு பேசி, நெசவாளர் உலகம் சிந்தும் கண்ணீரை இவர்கட்குப் படம்பிடித்துக் காட்டியவண்ணம் உள்ளனரே!

வெளி நாடுகளில் நம் நாட்டுக் கைத்தறி ஜவுளிகளுக்கு அமோகமான வரவேற்பு இருக்கின்றதென்பதை இந்த சர்க்கார் தெரிந்து கொள்ளவில்லையா — அப்படியும் கூறமுடியாதே! வெளி நாடுகளில் இந் நாட்டுக் கைத்தறி ஜவுளிகளுக்கு ஏராளமான வரவேற்பு இருப்பதைத் தெரிந்துகொண்டதால் தானே, தடை போடாவிட்டால் ஏற்றுமதி அதிகமாகிவிடும் என்றெண்ணி, ஏற்றுமதித் தடைவிதித்திருக்கின்றனர் இந்த சர்க்கார்!

அப்படியானால் டில்லி சர்க்காரின் இந்த விபரீத நடத்தைக்கு உண்மையான காரணம்தான் என்ன? இதோ, பதில்:


"தென்னாட்டில் விவசாயத்

திற்கு அடுத்த சிறந்த தொழிலாக இருப்பதும் சுமார் 30 லட்சம் நெசவாளர் குடும்பத்தினர்க்கும் 2, 3, லட்சம் வியாபாரிகள் குடும்பத்தினர்க்கும் உணவு அளித்து வருவதும் இந் நாட்டுக் கைத்தறி நெசவுத் தொழில் என்பது மத்திய சர்க்காருக்குத் தெரியாது! **அவர்கள் எதற்கு எடுத்தாலும் வடநாட்டு ஆதிக்கத்திலுள்ள மில் துணியையே முக்கியமானதாகக் கருதுகின்றனர்.''**

ஆம்! அதுதான் உண்மையான காரணம்! அவர்கள் எதற்கெடுத்தாலும் வடநாட்டு ஆதிக்கத்தில் உள்ள மில் துணியையே முக்கியமானதாகக் கருதுகின்றனர்; தென்னாட்டு கைநெசவுத் தொழில் பற்றி அக்கறையே காட்டுவதில்லை! இந்தச் சிறந்த உண்மையை அஞ்சாமல் எடுத்துக் கூறியிருக்கும் ஏடு **''செங்குந்த மித்திரன்''**! அது திராவிடர் கழகப் பத்திரிகை அல்ல! திராவிடர் கழகப் பத்திரிகையாய் இருந்தால், ''ஆமாம் இவர்களுக்கென்ன வேலை! எப்போது பார்த்தாலும் வடநாடு தென்னாடு வடநாடு தென்னாடு என்றுதான் பேசிக் கொண்டிருப்பார்கள், என்ன இருந்தாலுமே இந்தப் பேத புத்தி ஆகுமோ?'' என்று சர்க்காரோ, அல்லது சர்க்காருக்குக் கட்டியங் கூறும் விதூஷக வேடம் பூண்டுள்ள காங்கிரஸ் பத்திரிகைகளோ கூறிடமுடியும்! ஆனால் இப்போது இந்த உண்மையை ஊருக்கெல்லாம் எடுத்துரைக்கும் உத்தமப் பணியைச் செய்திருக்கும் ஏடோ **செங்குந்தமித்திரன்!** அது திராவிடர் கழக ஏடு அல்ல என்பது மட்டுமல்ல, திராவிடர் கழகம் இருக்கும் திக்கு நோக்கியும் பார்க்க விரும்பாத ஏடு! பழமையிலே ஊறித் திளைத்த பத்திரிகை! இன்னமும் பிள்ளையார் சுழியிலே தொடங்கி சிவமயம் வழியே சென்று கந்தரலங்காரப் பாட்டிலே அடைக்கலம் புகுந்திடும் தாள்! அத்தகைய இதழிலே இந்தக் கருத்து வெளிவந்திருக்கிறது என்று சொன்னால் இதனை வேண்டுமென்றே கூறியது என்றோ, இட்டுக்கட்டி எழுதியது என்றோ, திராவிடர் கழக துவேஷப் பிரசாரம் என்றோ மத்திய சர்க்காரானாலும் சரி, மாகாண சர்க்காரானாலும் சரி, எளிதில் கூறிவிட முடியாது.

''எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார் வடநாட்டு ஆதிக்கத்தில் உள்ள மில் துணியையே முக்கியமானதாகக் கருதுகின்றனர்! தென்னாட்டுக் கைநெசவைக் கைவிடுகின்றனர்!'' என்று, சர்க்காரை எதிர்த்து ஒரு வார்த்தை சொல்வதென்றால் எவ்வளவோ யோசித்துத் தீரவேண்டிய நிலையில் உள்ள ''செங்குந்த மித்திரன்''களே ஒப்புக்கொண்டு தீரவேண்டிய அளவுக்கு மத்திய சர்க்காரின் இந்தப் போக்கு சூழ்ச்சி நிறைந்ததாகவும் சூது மிகுந்ததாகவும் ஆகிவிட்டிருக்கிறது.

*   *   *




▩ சர்க்கார் அனுமதித்துள்ள ஏற்றுமதியின் அளவு

**மேலே உள்ள படம்:** மில்துணிகளுக்கு சர்க்கார் தந்துள்ள ஏற்றுமதி அனுமதியின் அளவு

**கீழே உள்ள படம்:** கைத்தறித் துணிகளுக்குத் தந்துள்ள அளவு.

**இதோ பார்க்கிறீர்களே இரு படங்கள், இவை வெறும் படங்கள் அல்ல; டில்லி சர்க்காரின் வஞ்சனை நிறை உள்ளம்!** டில்லி, எப்படி முதலாளிகளின் கைப்பாவையாக மாறி, மில்களுக்கு ஏராளமான சலுகையையும் கைத்தறிகளுக்கு மிகுந்த அலட்சியத்தையும் பரிசாக அளிக்கின்றது என்பதை நன்கெடுத்துக் காட்டுவனவே இப்படங்கள்.

முதல் படம் எவ்வளவு அதிகமான **மில் துணிகளை** பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய சர்க்கார் அனுமதிக்கிறது என்னும் உண்மையின் உருவம். இரண்டாவது படம் **கைத்தறித் துணிகளில்** ஏற்றுமதி அனுமதி பெற்றுள்ள தொகை எவ்வளவு குறைவு என்பதன் நிலைமை விளக்கம்.

மில்களுக்கு—முதல் படத்தைப் பாருங்கள்—கிடைத்துள்ள அனுமதி கோட்டா 75 பங்கு! கைத்தறிகளுக்கு—இரண்டாம் படத்தைப் பாருங்கள்—கிடைத்துள்ள அனுமதி கோட்டா 3 பங்கு! 75 கோடி கெஜம்—மில் முதலாளிகளுக்கு! 3 கோடி கெஜம் கைத்தறித் தொழிலாளர்கட்கு! எப்படி இருக்கிறது டில்லி சர்க்காரின் ஓரவஞ்சகம்!

மில்களின் மொத்த உற்பத்தி 450 கோடி கெஜம். இதில், சர்க்கார், ஏற்றுமதிக்கு அனுமதி தந்துள்ள தொகை 75 கோடி கெஜம்!

கைத்தறிகளின் மொத்த உற்பத்தி 150 கோடி! இதில் ஏற்றுமதி உரிமை பெற்றுள்ள அளவு 3 கோடி!

மில்களுக்கு 75 கோடி! கைத்தறிகளுக்கு 3 கோடி!

குட்டிக் குபேரர்கள் எனவாழும் ஆலை அரசர்களுக்கு 75 கோடி! ஏழைக் கைத்தறித் தொழிலாளருக்கு 3 கோடி!

டலால், பிர்லா டால்மியா, கோயங்காக்களுக்கு 75 கோடி! கந்தன் முனியன் கண்ணன் கதிர்வேலர்களுக்கு 3 கோடி!

எவ்வளவு சூது நிறைந்த சூழ்ச்சிகர ஏற்பாடு!

பணம் மலைபோல் குவிந்து கிடக்கும் இடத்திற்கு பணம் மேலும் சென்று குவிவதற்கான வழிவகைகளை வகுத்துத் தந்துவிட்டு, சர்க்கார், அதே நேரத்தில், வாழ வழியின்றி வதைபடும் ஏழையின் வயிற்றை மேலும் வதைக்கத் திட்டம்

(8—ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

1—1—49 சனிக்கிழமை

# வெற்றி! வெற்றி!

## உரிமைப் போராட்டத்தில்

# பெரு வெற்றி!

★

குடந்தைக் களத்தில் நாம் தொடங்கிய உரிமைப் போராட்டம் பத்தே நாட்களில் பெரு வெற்றி தந்து விட்டது—சர்க்கார் எழுப்பிய 144 எனும் கற்கோட்டை திராவிடப் புயலில் சிக்குண்டு சடசடவெனச் சரிந்து வீழ்ந்துவிட்டது!

தீரத் திராவிடர்கள் வெற்றி பெற்றுவிட்டனர்! குடந்தைமா நகரம் வெற்றி பெற்று விட்டது! உரிமைப் போராட்டம் வெற்றி பெற்று விட்டது! தலைவரின் ஆணை, தளபதியின் கட்டளை, வெற்றி பெற்று விட்டன! ஆம்! அஞ்சாத நெஞ்சு படைத்த அந்த அடலேறுகள் குடந்தை மண்ணில் கொட்டிய குருதி வெற்றி பெற்றுவிட்டது!—144, குப்புறக் கவிழ்ந்து கும்மிருட்டில் வீழ்ந்துவிட்டது!

உள்ளக் கருத்தை ஊராருக்கெல்லாம் உவந்தெடுத்துரைக்கும் உரிமையா—அது கிடையாது எங்கள் இராமராஜ்யத்தில் என்று கொக்கரித்தார்கள் ஆணவ உள்ளம் படைத்த ஆளவந்தார்கள்! அந்த கொக்கரிப்பு மாண்டு மடிந்து, மண்ணோடு மண்ணாக இரண்டறக் கலந்து போய்விட்டது; உரிமை, ஊராள்வோரின் கூர்வாளைப்பற்றிச் சிறிதும் கவலையின்றி குடந்தை வீதிகளில் உல்லாசமாகப் பவனி வருகிறது.

"ஆயிரமாயிரம் வாலிபர்கள் தங்கள் சொந்த வாழ்க்கை எனும் குகையை விட்டு வெளியே வந்து சிங்க ஏறுகள் என சீறிப் போராடுகிறார்களா, கிடக்கிறார்கள் அச் சிறுமதியாளர்கள், குவலயமே எதிர்த்து வந்தாலும் அதை அடக்கும் அதிகார ஈட்டி எம்மிடம் உண்டு, அறியாரோ இதனை அப் பேதைகள்?" என்று எல்லாம் அறிந்தவர் போல் மூன்பு எக்காளம் இட்டார்கள் ஓமந்தூராரர்கள். இன்றோ தோல்வி நம் தோளை மேவலாச்சுதே, துக்கம் நம் நெஞ்சை வந்து அடைக்கலாச்சுதே, என்று பரிதாபச் சிந்து பாடுகிறார்கள், உரிமை வைரம் தம் கண்களைப் பறிக்கும் அளவு பளிச் பளிச் எனப் பேரொளி வீசக் கண்டு பதைபதைக்கிறார்கள்.

"பெரியாராம் பெரியார்! ஏதறிவார் அம் முதியார்! சிறை எனும் சிறுத்தை சீறும் கண்களுடன் எம் பக்கல் உள்ளதே தெரியாதோ அவருக்கு!" என்று பெரியார் இராமசாமியின் புரட்சி உள்ளத்தை உணராது புன்மொழிகளை வீசினர் புல்லறிவுடைய ஆளவந்தார்கள்—அது அன்று! ஆனால் இன்றோ, "பெரியாரைக் கண்டதும் சிறைச்சாலை மதில்களும் சிதைந்து போயினவே! பெரியாரும் இரண்டே நாளில் சிறை மீண்டு போயினாரே!" என்று பிரலாபிக்கின்றனர்—பிரலாபம் நடந்துகொண்டிருக்கும்போதே பெரியாரின் பட்டாளம் உரிமைப் போராட்டத்தில் உன்னத வெற்றி பெற்றுவிட்டது.

அடக்கு முறை பாணங்கள் ஆயிரமாயிரம் உண்டு எம் அம்பறாத் தூணியில் என்றார்கள் சர்க்கார். "ஆஹா! தயார் அத்தனைக்கும், உயிர் எமக்கு வெல்லமல்ல!" என்று பதில்உரை புகன்றார்கள் பைந்தமிழ் வீரர்கள்!

சிறையில் அடைப்போம்! உம் சிற்றுடலைச் சிதைப்போம் என்று மிரட்டினார்கள் மந்திரிமார்கள்! சிறை தானே, அது எமக்கு சிங்காரத் தோட்டம் என்றார்கள் **குடந்தைத் தளபதிகள்.**

"தடையை மீறினீரோ! ஊர்வலத்தை நடத்தினீரோ! இரண்டுமாத காராக்கிரகம் உமக்குத் தண்டனை! இந்தாரும் ஏற்றுக்கொள்ளும்" என்று நிமிர்ந்த நோக்குடன் நெடுமொழி புகன்றனர் நல்லறிவாளர்கள் என்று தமக்குத்தாமே பட்டம் சூட்டிக்கொள்ளும் சென்னை பாதுஷாக்கள்! "இரண்டு மாதமென்ன இரண்டு ஆண்டுகளானாலும் சரியே, உரிமையற்ற பிணமென ஊரில் வாழ்வதைக் காட்டிலும் உரிமைக்காகப் போராடி உம் கொடுஞ் சிறை புகுவதே மேல் என்று சிரித்த முகத்துடன் செந்தமிழை வீசிவிட்டு சிறைக்கோட்டம் சென்றனர் "விடுதலை" ஆசிரியர், வீராங்கனை **மணி அம்மையார்!**

"குடந்தையில் நடக்கும் எங்கள் கொடுமையை குவலயத்திற்கெல்லாம் கூறுகிறாயா—பிடி சாபம்" என்றனர் சர்க்கார்! சாபம் பலிக்காது சர்க்காரே என்று கிண்டல் மொழிகளை வீசியவண்ணம் சிறைச்சாலைக் கதவைத் திறவும்—சிறு தாமதமும் வேண்டாம் எனக் கட்டளையிட்டார் நம் நண்பர் **என். வி. நடராசன்!**

ஓஹோ! சிறை புகுந்துவிட்டால் தியாகிகள் எனும் விருது பெற்று 5 ஏகர் நிலம் பெறலாம் என்றெண்ணுகிறீரோ அது நடவாது இனி! தடியால் அடிப்போம்! முதுகை முறிப்போம் என்று கண்களை உருட்டி மிரட்டி உக்கிரப் பார்வை பார்த்தவண்ணம் அனல்மொழி வீச ஆரம்பித்தனர் சர்க்கார்—தடியடி தானே இதோ வந்தோம் வந்தோம் என்று வீரஉரை புகன்றவண்ணம் வீரத் திராவிடர்கள் வரிசை வரிசையாக களத்தில் வந்து நின்றனர்.

அடிப்போம் என்று ஆர்ப்பாட்டம் செய்தனர் ஆளவந்தார்கள்—அடித்தனர். தொண்டர்தம் உடலைத் தடியால் துவட்டிச் சிதைப்போம் என்றனர்—சிதைத்தனர். உலக்கைத் தடியை மாறி மாறி ஓச்சினார். உத்தமத் தொண்டர்கள் மார்பு மீதும் முதுகு மீதும்! அய்யோ அய்யோ என்று அலறவில்லை அவர்கள், தமிழ் தமிழ் என இன்சொல் புகன்றவண்ணம் அமைதியாக ஏற்றனர் ஆணவமிகு ஆட்சியினரின் அக்கிரமமிகு தடியடியை!

இரத்தம் கொட்டிற்று—வீரர்கள் அசையவில்லை. எலும்புகள் முறிந்தன—அடலேறுகள் கண்கலங்கவில்லை. தசைநார்கள் அறுந்து வீழ்ந்தன—தடதடவென்று ஓடினாரில்லை. தழும்புகள் தோன்றின—நெஞ்சம் உடையவில்லை. உடைந்து சிதறும் எலும்பு மூட்டில் மேலும் ஓர் அடி வீழ்ந்தது—போலீஸ் ஒழிக என்று கூடப்புகலவில்லை.

அடிக்க அடிக்க அசையா இமயம் என நின்றனர். குருதி கொட்டக் கொட்ட உரிமை உரிமை எம் தாய் நாட்டுக்கு உரிமை என்று இலட்சிய முழக்கம் செய்தனர்.

தடியடியால் சுருண்டு உடலெல்லாம் வெதும்பி மரணப் பாதையில் மனம்நொந்து கிடக்கும் தொண்டர்களை உருட்டிச் சுருட்டி வீசி எறிந்தனர் கானகத்தில்—தொண்டர்கள், சாகும் அந் நிலையிலும் செந்தமிழை வாழ்த்த மறக்கவில்லை.

குடந்தை சிவப்பாயிற்று—கண்டு மிரளவில்லை குடந்தைத் திராவிடர். பத்தாயிரம் இருபதாயிரம் எனத் திரண்டு அணி அணியாக அறப்போர் வீரர்கள் பக்கம் நின்றனர், 144 ஐ நொறுக்கி நொறுக்கி உடைத்துத் தூள் தூள் ஆக்கினர்.

ஈவு இரக்கமற்ற சர்க்கார் இளகிய உள்ளம் என்பது சிறிதுமின்றி தொண்டர்களை அடிக்க அடிக்க தொண்டர் கூட்டம், ஒன்று பத்து நூறாகப் பெருகிற்று. கூட்டம் கூட்டமாக வந்தனர் அறப்போர் வீரர்கள். குருதி, மண்ணில், கொட்டும் நிலை நேரிட்டால் பிறகு தமிழ் காக்கும் தொண்டர்கள் குடந்தைக் களம் நோக்கி வாரார் வாரார் என்றெண்ணினர் சர்க்கார்: தொண்டர்களோ நான் முந்தி நீ முந்தி எனப் போட்டி போட்டுக்கொண்டு முன்வரலாயினர்.

தடியடியின் 'உக்கிரம்' வளர வளர தொண்டர்களின் தொகைமட்டுமல்ல நெஞ்சு உரமும் வளரலாயிற்று. சர்க்கார் பக்கம் இரக்கம் எனும் உயர் பொருள் சுருங்கச் சுருங்க உரிமைப் போர்முனையில் வீர உணர்ச்சியும் தமிழ்ப்பற்றும் மேலும் மேலும் பெருகலாயின. ஓமந்தூரார்களின் நெஞ்சிலிருந்து மனிதப் பண்பு மறைய மறைய அறப்போரில் குதித்துவிட்ட அடலேறுகளின் உள்ளத்தில் அஞ்சாமைச் செல்வம் இன்னும் இன்னும் வளரலாயிற்று.

உரிமைப் போர் எனும் பெருந்தீயை தம் அடக்குமுறை எனும் சிறு தடி அடக்கிவிடும் என்றெண்ணிய சர்க்கார், இந்தத் தடியும் அந்தத் தீயில் பற்றி எரியக் கண்டு சீறினர்—முதலில்! திகைத்தனர் — பிறகு! தேம்பினர்—அடுத்து! தோற்றனர்—முடிவில்! வென்றனர் திராவிடர்—உயர்ந்தது உரிமைக் கொடி!

ஏழெட்டு நாட்கள் கோரமான தடியடி தர்பார் நடத்திக் காட்டியும், உரிமைப் போர், அதன் அளவிலோ, முறையிலோ, வேகத்திலோ, விறு விறுப்பிலோ அணுவளவும் குறையாதது கண்ட சர்க்கார், தம் தோல்வியை வெளிப்படையாக ஒப்புக் கொள்வதுபோல தடியடியை எட்டாம் நாள் போராட்டத்தின்போது நிறுத்திவிட்டனர். ஆம்! சர்க்காரிடமிருக்கும் பலம் பொருந்திய குண்டாந்தடி திராவிடர் உள்ளம் எனும் எஃகுக் கோட்டையை நொறுக்கி வீழ்த்தப் பார்த்து, அந்த முயற்சியில் தானே முறிந்து வீழ்ந்துவிட்டது. சர்க்கார், தடியை உயர்த்தியபோதே நாம் எச்சரித்துச் சொன்னோம் இதுதான் நடக்கும் என்று! கேட்கவில்லை நம் ஆய்வுரையை! இன்றோ தோல்வியைத் தழுவி, அவமானம் அடைந்து, தலையைக் கவிழ்த்து, தடிகளை வீசிவிட்டு, சோகம் தம் முகத்திலே ததும்ப, வெட்கம் தம் கண்களில் நிழலாட, தோற்றுப் போனோமே என்ற நினைப்பு நெஞ்சை உறுத்த, சர்க்கார், அதோ, முறிந்துபோன 144ஐப் பார்த்துப் பார்த்து "அந்தோ மகனே மாண்டாயோ!" என்று அரற்றிய வண்ணம் இருக்கிறார்கள்! அந்தோ பாபம்! நம் ஆழ்ந்த அனுதாபம் அவர்கட்கு உரித்தாகுக!

குடந்தையில், 144, மதிப்பற்று மங்கிவிட்டது, அதைக் கண்டு, அதற்கு வணக்கம் செலுத்தி, அதன் ஆணைப்படி நடக்கும் திராவிடர் யாருமில்லை. 144, ஊர்வலமே கூடாது குடந்தையில் என்று கூறுகிறது; ஆனால் ஊர்வலமோ தினம் தினம் குடந்தை வீதிகளில் ஜாம் ஜாம் என நடந்த வண்ணம் இருக்கிறது. வேறு மொழியிலே கூறுவதானால், 144, குடந்தையில் செத்துப்போய்விட்டது, உரிமைப் போர் வெற்றி பெற்றுவிட்டது.

செத்த பிணத்தை அடிப்பவன் வீரன் அல்லன்! முடிந்துபோன போராட்டத்தை மேலும் தொடர்ந்து நடத்துவதில் அர்த்தமும் இல்லை! எனவே குடந்தைப் போராட்டத்தை இனியும் தொடர்ந்து நடத்தத் தேவையில்லை என்று தஞ்சையில் கூடிய திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி இந்த வாரம் தீர்மானித்திருக்கிறது. இது மிக மிக நியாயமான முடிவு மட்டுமல்ல பெருந்தன்மை மிகு முடிவுகூட!

நாம் வீணர்கள் அல்ல; வீண் பெருமைக்கோ, பிறர் பார்த்து மெச்சுதற்கோ, வீரர் பட்டம் பெறுவதற்கோ போராட்டம் நடத்துபவர்களும் அல்ல; உரிமைக்காகப் போர் தொடுத்தோம், இரத்தம் சிந்த நேர்ந்தபோதும் அஞ்சாமல் நின்று போராடினோம், போர்வென்றது, சர்க்கார் பணிந்தது, போரை நிறுத்துகிறோம்—வெற்றிச் சங்கு ஊதியவண்ணம், வாகை மாலை சூடிய வண்ணம்!

நாம், உண்மை வீரர்களாக இல்லாமல் பெயருக்காகவோ புகழுக்காகவோ போராடுபவர்களாக இருந்திருந்தால், பெருந்தன்மை படைத்தவர்களாக இல்லாமல் படாடோபமும் பாசாங்குத்தனமும் படபடப்புமே உடையவர்களாக இருந்திருந்தால், இலட்சியம் எது— அதை நிறைவேற்றும் வழிகள் எவை என்பன போன்றவற்றை அறியாது சர்க்காரை எதிர்த்து எப்போதும் சல்லடம் கட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்தையே நம் முழு நோக்கமாகக் கொண்டவர்களாக இருந்திருந்தால், குடந்தைப் போராட்டத்தை, சர்க்கார் தோற்ற பிறகும் தொடர்ந்து நடத்தியிருப்போம். ஆனால் நாம் பெரியார் என்னும் உன்னதப் போர்வீரரால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளவர்கள். எனவே தோற்றுப் போனவர்களுடன் மேலும் தொடர்ந்து போராட நம் உள்ளம் இசையவில்லை. நம் நோக்கம் சர்க்காரைக் கவிழ்ப்பதல்ல—உரிமையைக் காப்பது! சர்க்காரைக் கவிழ்ப்பது நம் நோக்கமானால் குடந்தைப் போராட்டத்தை ஒரு சாக்காகக் கொண்டு சர்க்கார் கவிழும் வரை போராடியிருப்போம். நம் நோக்கம் அதுவல்ல. ஆதலால் உரிமைச் செல்வன் குடந்தைத் தெருக்களில் வெற்றிக் களிப்புடன் வீர உலாவரும் இந்த அளவில் நம் போர் நிற்கிறது.

சென்னை சர்க்கார், ராஜதந்திரமும் வரலாற்று அறிவும், நாகரிக உணர்ச்சியும் உடையவர்களானால், குடந்தைப் போரில் தங்கட்கு ஏற்பட்டுள்ள மகத்தான தோல்வியை ஒரு பாடமாகக் கொண்டு, வேறு சிற்சில ஊர்களில் விதிக்கப்பட்டுள்ள 144 உத்தரவுகளையும் உடனடியாக "சமாப்தி" செய்து விடவேண்டும்.

நாகரிகம் தெரிந்த ஒரு நல்ல சர்க்கார் செல்லும் பாதை இதுவாகத்தான் இருக்கும். சென்னை சர்க்கார் என்ன செய்யப்போகிறது?

குடந்தையில் உரிமைப் போர் வெற்றி பெற்றதும் 144 விதிக்கப்பட்டுள்ள வேறு ஊர்களிலும் உடனே போராட்டம் தொடங்கவேண்டும் என்று திராவிடர் கழகம் எண்ணியிருந்தால் அதைச் செய்வது மிக எளிது. அதற்கு வேண்டிய வசதிகளும் முறைகளும் கருவிகளும் கழகத்தினிடம் ஏராளமாக உள்ளன. என்றாலும் குடந்தைப் போர் முடிந்ததும், வாகை சூடிய திராவிடர் கழகம், வேறு எங்கும் போர் தொடங்காமல் தற்போதைக்கு இந்த அளவில் விட்டிருப்பதற்குக் காரணம், சர்க்கார், தமக்கு ஏற்பட்ட குடந்தைத் தோல்வியைப் பற்றி சிந்தித்துப் பார்க்க அவர்கட்குச் சிறிது அவகாசம் தரவேண்டும் என்பதுதான்.

சர்க்கார், தமக்குக் கிடைத்துள்ள இந்த ஓய்வை, சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளட்டும்—பழைய தடிகள் முறிந்துபோயினவே, இனி வேக வேகமாக புதிய தடிகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற ஏகாதிபத்திய எண்ணத்தில் இறங்கிவிடாமல்!

குடந்தைப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்துள்ள இந்த வேளையில், உரிமைப்போரில் ஈடுபட்டு சொல்லொணாத் துயர் உழந்துள்ள நம் அருமைத் **தொண்டர் குழுவினர்க்கும்**, புன்முறுவல் பூத்த முகத்தோடு அறப் போர்ப் பணியினை மேற்கொண்டு, அயராது உழைத்து, அதன் காரணமாகச் சிறையில் கிடந்து வாடும் **தலைவர்கட்கும்**, அன்றோர் நாள் ஈரோட்டில் 144 ஐ எதிர்த்து அறப்போர் ஆற்றிய அன்னை நாகம்மையார் போல இந் நாள் குடந்தையில் சிறந்த போர் தொடுத்துச் சிறைபுகுந்த **தோழியர் மணி அம்மையார்க்கும்**, இத்தனை விரைவில் இத்தனை பெரும் போராட்டம் இவ்வளவு பெரிய வெற்றியை அடையும் முறையில் அற்புதமான போர்முறைகளை வகுத்துக் கொடுத்த நம் அரும்பெரும் தலைவர் **பெரியார்** அவர்கட்கும், பெரியார் சிறைப்பட்ட சேதி கேட்ட உடனே முந்நூறு கற்களுக்கு இப்பால் உள்ள காஞ்சியிலிருந்து தஞ்சைமாவட்டத்தில் உள்ள குடந்தைக்குப் பறந்தோடிச் சென்று களத்திலேயே நின்று போரைத் தொடர்ந்து நடத்திய அறப்போர்த் **தளபதி அண்ணா** அவர்கட்கும், இந்த உரிமைப் போராட்டத்தில் தம்தம்பால் இயன்ற அளவு தம் தம்மால் இயன்ற வழியெல்லாம் பணியாற்றிய **திராவிடர் அனைவர்க்கும்**, நம்முடைய அன்பையும் பணிவையும் வாழ்த்துதலையும் நன்றியறிதலையும் கடப்பாட்டு உணர்ச்சியையும் உரிமையாக்குகின்றோம்.

**வாழ்க திராவிடம்! வாழ்க ஜனநாயகம்!**

* * *

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தீட்டுகிறது! எவ்வளவு மரத்துப் போன உள்ளம் இருக்கவேண்டும் இந்தசர்க்காருக்கு இவ்வளவு மனிதப்பண்பற்ற காரியம் ஆற்றுவதில் கவலை பிறக்க! மில் முதலாளிகளுக்கு, பெருகிக் கிடக்கும் பணத்தை மேலும் பெருக்கிக் காட்ட வேண்டும் என்பது ஆசை, **தேவை அல்ல!** அந்த ஆசையைப் பூர்த்தி செய்வதில் அளவற்ற அக்கரை காட்டுகிறது டில்லி ஆனால் ஏழை நெசவாளருக்கு வயிற்றுக்குச் சோறு வேண்டுமென்பது **தேவை, ஆசை அல்ல!** அந்தத் தேவையையும் நிறைவேற்ற விருப்பமின்றி கையை விரிக்கிறது. இது நியாயமா? அவனியிலிருந்து மறைந்து போன அண்ணல் காந்தியடிகளுக்கு அவர்தம் பிரதம சீடர்கள் காட்டும் மரியாதை, பற்று, பக்தி, அன்பு, இதுதானா?

"வேற்று நாடுகள் மில் துணிகளை அதிகம் விரும்பினால் அதற்கு சர்க்கார் என்ன செய்ய முடியும்? ஏற்றுமதியில் மில் கோட்டா அதிகமாகவும் கைத்தறி 'கோட்டா' கொஞ்சமாகவும் இருப்பதற்குக் காரணம் இதுவாக இருக்கலாம்" என்று நினைத்து ஆறுதல் பெறலாம் என்று எவரேனும் கருதக் கூடும். ஆனால் நிலைமை அப்படியும் இல்லை. பாகிஸ்தான், தனக்குத் தேவையான இந்தியத் துணிகள், பாதி—மில் துணி, பாதி—கைத்தறித் துணி என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால் இந்திய சர்க்காரோ 95 பங்கு மில் துணிகளும் 5 பங்குதான் கைத்தறித் துணிகளும் தரமுடியும் என்று தெரிவித்துவிட்டனர். பிற நாடுகளில், எப்போதுமே, இந்திய மில் துணிகளைவிட இந்தியக் கைத்தறிகளுக்கே, குறிப்பாக், லுங்கி ரகங்களுக்கே, அதிக தேவையும் செல்வாக்கும் இருந்துவருகிறது. ஆகவே, சர்க்கார், மில் துணிகளுக்கு 75 கோடி கெஜ ஏற்றுமதி 'கோட்டா'வும், கைத்தறிகளுக்கு 3 கோடி கெஜ கோட்டாவும் கொடுக்கும் ஏற்பாட்டில், "மில்களை வளர்க்கவேண்டும்—கைத்தறிகளை நசுக்கவேண்டும்" என்ற சூழ்ச்சிகரமான பயங்கரக் கருத்து ஆழப் புதைந்துகிடக்கிறது என்பதை எவரும் மறுக்க மிடியாது.

மில்கள்—வடநாட்டின் வளர்ச்சிக்குரிய மூலதனம். கைத்தறிகள்—தென்னாட்டில் உள்ள ஒரே ஒரு பெரிய தொழில்.

வடநாட்டில் மில்கள் ஊருக்கு ஊர் ஏராளமாக அமைந்து கிடக்கின்றன. அதோடு தினம்தினம் புதிய புதிய மில்கள் திடீர் திடீர் என முளைத்தவண்ணம் இருக்கின்றன. ஆனால் தென்னாட்டிலோ விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில மில்களே உள்ளன. இங்கு, புதிய மில்கள் தோன்றவோ சர்க்கார் அனுமதிப்பதில்லை. தென்னாடு முழுவதும் சேர்த்தால் 30 மில்கள் கூட இல்லை. ஆனால் வடநாட்டில் பம்பாய் நகரம் ஒன்றில் மட்டும் 100 க்கு மேற்பட்ட மில்கள் உள்ளன. ஆகவே இன்றைய நிலையில் மில்கள் என்றால் வடநாடு, வடநாடு என்றால் மில்கள் என்று நாம் சொன்னால் அதில் அதிகத் தவறு கிடையாது.

அதேபோல, கைத்தறிகள் வடநாட்டில் வேகமாகக் குறைந்து வருகின்றன — குறையத்தானே செய்யும்—மில்கள் ஏற்பட ஏற்பட கைத்தறிகள் வாழமுடியாதல்லவா—ஆனால் தென்னாட்டிலோ கைத்தறிகள் மிக்க செல்வாக்குடன் இருப்பதோடன்றி பல சமயங்க

ளில் வடநாட்டு மில்களை எதிர்த்து, நிமிர்ந்து நின்று போட்டி போடவும் முடிகிறது அவைகளால்! இந்த நிலையில் தென்னாடு என்பது கைத்தறி என்றும் கைத்தறி என்பது தென்னாடு என்றும் எளிதில் சொல்லிவிடலாம்.

மில்களின் வளர்ச்சி வடநாட்டின் வளர்ச்சி!

கைத்தறிகளின் வளர்ச்சி தென்னாட்டின் வளர்ச்சி!

அதுமட்டுமல்ல, தென்னாட்டில் இருக்கும் மக்களின் ஆடைத் தேவைகளை, ஏறத் தாழ முழுவதும் தென்னாட்டுக் கைத்தறிகளே பூர்த்தி செய்துவிடுகின்றன. தென்னாட்டுக் கைத்தறிகள் ஆண்டுக்கு 50 கோடி கெஜம் உற்பத்தி செய்கின்றன. இது, தென்னாட்டவர்க்கு, ஏறத்தாழ, போதும்.

கைத்தறிகள் அடியோடு நசுக்கப்பட்டு விட்டால் தென்னாட்டுத் துணி மார்க்கட் இப்போது இருப்பதுபோல அரை குறையாக அல்லாமல், முழுவதுமாக வடநாட்டு மில்களுக்குக் கிடைத்துவிடும். என்பது மட்டுமல்ல, பாகிஸ்தான் பர்மா மலேயா பினங்கு முதலிய வேற்று நாடுகளில் தென்னாட்டுக் கைத்தறி ஜவுளிகளுக்கு இப்போதுள்ள மார்க்கட்டும் அந்தவடநாட்டு மில்களுக்கே சென்றுவிடும். ஆம்! தென்னாடு தன்னிடமுள்ள ஒரேஒரு தொழில் என்று பெருமை பாராட்டிக் கொள்ளக்கூடிய — இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 10ல் 1 பங்கு இங்கு உற்பத்தியாகிறது என்று மார் தட்டிக் கூறக்கூடிய—ஒரு தொழில், கைநெசவுத் தொழில், தென்னாட்டுத் தொழில், சங்க காலத்திற்கும் முன்னாலிருந்து தமிழகத்தில் தழைத்து வரும் தொழில்—அந்தத் தொழில் சமாதிக் குழி புகுந்து விடும்!

இந்த இரண்டு "உன்னத" இலட்சியங்களுக்காகவும்தான் வட இந்திய சர்க்கார் கைத்தறி ஜவுளிகளுக்கு ஏற்றுமதித் தடை விதித்திருக்கிறது. தன் நாட்டுத் தொழிலுக்குத் தானே குழி தோண்டும் செயல்போல, அறிந்தோ அறியாமலோ இதற்கு ஒத்து ஊதுகிறது சென்னை சர்க்கார்!

*   *   *

அவர்கள்—தென்னாட்டில் உள்ள அந்த இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள், கண்ணீர் சிந்துகிறார்கள் தங்கள் வாழ்க்கை பாலைவனமாகிவிட்டதே என்பதை எண்ணி! நாமோ கண்ணீர் சிந்த முடியவில்லை — வரிசை வரிசையாக, வடநாடு, தென்னாட்டிற்கு இழைக்கும் இத்தகு கொடுமைகளைக் கண்டு கண்டு, அலறித் துடித்துத்துடித்து கண்ணீர் சிந்திச் சிந்தி, நம் கண்களிலிருந்து ஈரம் வற்றிப் போய் நெடுநாட்களாய்விட்டன!

*   *   *

வாழ்ந்துகெட்ட, வளமார் திராவிடமே! நீ இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கப் போகிறாய்! இதற்கு ஒரு முடிவு கிடையாதா? கண்ணீர்! அதுதவிர வேறு பதில் இல்லையா? திராவிடமே! எம்மைப் பெற்றுவளர்த்த பொன்னாடே, ஏன் பேசாமல் இருக்கிறாய்? பேசு! தைரியமாகப் பேசு! நெஞ்சு நிமிர்ந்து அஞ்சாமல் பேசு! ஆண்மை உள்ளம் படைத்த இந்த ஆளவந்தார்களைப் பற்றி அணுவளவும் கவலையின்றிப் பேசு! சுதந்தரம் உன் பிறப்புரிமை! அதை யார் தடுக்க முடியும்? எதுவரினும் வரட்டும். அஞ்சற்க! போ தைரியமாக! போ புரட்சிப் பாதையில்! தனி ஆட்சி எனும் தரணி நோக்கி, திராவிடமே, போ! போ! விரைந்து முன்னேறு! அதோ, புதிய உலகம் உன்னை அழைக்கிறது, புதுவாழ்வு உன்னை அழைக்கிறது, சமதர்மபுரி உன்னை அழைக்கிறது! அந்த அன்பழைப்பை ஏற்றுக்கொள்! தனி ஆட்சியை நிறுவு! வடவர் சுரண்டலிலிருந்து விடுபடு! டில்லியுடன் உள்ள தொடர்பைக் கத்திரித்து விடு! அப்போதுதான் இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் ஒரு பரிகாரம் கிடைக்கும்.

——

## பொங்கல் மலர் உண்டா?

★

பலர் பொங்கல் மலர் உண்டா என்று கேட்டவண்ணம் உள்ளனர். மலர் இந்த ஆண்டு கிடையாது என்று எழுதியும் கூட நம்பாமல் சிலர் தபால் தலைகள் அனுப்பி விட்டிருக்கின்றனர். மலர் இந்த ஆண்டு இல்லை, உண்மையாகவே இல்லை! அறப்போர் மும்முரமாக நடைபெறும் இந்நாளில் மலர் வெளியிடுவதற்கு வேண்டிய மன அமைதியோ ஓய்வோ இல்லாமையே இதற்குக் காரணம்.

அச்சில் :: அச்சில்

தமிழ்நாடு தமிழருக்கே என்று பரணி பாடினோம்—திராவிடநாடு தனி நாடாகவேண்டும் என்பது கட்சியின் மூலாதாரத் திட்டமாக்கப்பட்டதுடன்—கட்சியின் பெயரே திராவிடர் கழகம் என்று மாற்றப்பட்டது — இலட்சியம் — நமது மூலமுழக்கம்—உறுதிகொள்ள ஓர் நாள்—இவையாவும் தெள்ளத் தெளிய அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய நமது சாசனம்,

# இலட்சிய வரலாறு

## திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"அத்தான்?" வேணி அழைத்தாள். நீர் நிறைந்த கண்களால், கூர்வேல்விழியாளைப் பார்த்தான்.

"என்ன யோசிக்கிறீர்கள் இன்னும்?"

"மனப்புயல்!"—மெள்ள கூறினான்.

"மனப்புயல்?" — ஆத்திரத்தோடு கேட்டாள்.

"குமுதம்—வேணி!" முணுமுணுத்தான்.

"வேணி இறந்துவிட்டாள்! குமுதம் இறந்துகொண்டிருக்கிறாள்! அவளைத்தான் தாங்கள் காப்பாற்றவேண்டும்! அதுதான் தங்கள் கடமை!"

"கண்ணே..............."

"நான் கன்னி! என் வாழ்நாள் முழுதும் கன்னி! கன்னி நிலையிலிருந்து தங்கள் கண்மணி நிலைக்கு பறந்து உயரவேண்டுமென்ற என் ஆசைப் பறவையின் சிறகுகள் ஒடிந்துவிட்டன! அத்தான், ஒருத்தியின் வாழ்வைப் பாழாக்கி, உள்ளத்தில் இடி விழச் செய்து அதனால் கிடைக்கும் அற்பமான அந்த இன்ப வாழ்வு எனக்கு வேண்டாம்! நான் கண்ட இன்பக் கனவுகள் கலைந்துவிட்டன! நான் கட்டிய மனக்கோட்டைகள் சரிந்துவிட்டன! தீட்டிய எதிர்காலத் திட்டங்கள் மறைந்துவிட்டன! அத்தான், அதற்காக நான் வருந்துகிறேன். ஆனால் குமுதத்தின் வாட்டத்தைவிட இது அதிகமல்ல! நான் ஏக்கமடைகிறேன், ஆனால் குமுதத்தின் ஏமாற்றத்தைவிட இது பெரிதல்ல!........"

"கண்ணே!

"வேண்டாம், வேண்டாம், இனி அன்போடு அழைக்கவேண்டாம்! என்னை அடையலாம் என்ற ஆசையும் இனி கொள்ள வேண்டாம்! கண்ணே என்று கனிவாகப் பேசி என் முடிவைக் கலைக்க வேண்டாம்! அத்தான், நான் வாழப் பிறந்தவள் அல்ல! என்னை மறந்துவிடுங்கள்! உயிரோடு போராடிக்கொண்டுள்ள அக்காவின் உயிரைக் காப்பாற்றி அவளை ஏற்று, என்மேல் ஏற்பட்டுள்ள பழிச் சொல்லைத் துடைத்துவிடுங்கள்! அத்தான், அத்தான், இன்னுமென்ன தாமதம்? புறப்படுங்கள் மலர்புரிக்கு!"

"இந்நேரம் குமுதம்........"

"தாங்கள் நினைப்பது தவறு! குமுதம் இறந்திருக்கமாட்டாள். ஓ.....' என் நெஞ்சம் — பேதைப் பெண்ணின் நெஞ்சம் — இந்தக் கடைசி நேரத்திலும் தங்கள் முகத்தை ஒருமுறை காணத் துடியாய்த் துடிக்கிறது!"..... என்று குமுதம் எழுதியிருப்பதிலிருந்து அவள் இறப்பதற்குமுன் தங்களை ஒருமுறையாகிலும் பார்க்கவேண்டுமென்றே ஆசையை மிக அதிகமாகக் கொண்டிருக்கிறாள் என்பது தெரிய வருகிறது. இறப்பதானாலும் தங்களைப் பார்த்துவிட்டுதான் இறப்பாள்! அதற்குத் தாங்கள் இடம் கொடுக்கக்கூடாது! மலர்புரிக்குப் புறப்படுங்கள்! புறப்படுங்கள்!" என்று அவசர அவசரமாக கண்ணில் நீர் ஒழுக ஒழுக கூறினாள் வேணி!

குமார் எழுந்தான்! அறையை விட்டு வெளியே வந்தான்! தெருக் கதவைத் திறந்தான்! வேகமாக மழையில் புகுந்து பைத்தியம் பிடித்தவனைப்போல் ஓடினான்! வாயிற்படியில் சோகமே உருக்கொண்டதுபோல வேணி நின்றுவிட்டாள்! எதுவும் சொல்லாது எங்கே குமார் போகிறான் என்றெண்ணி ஒன்றும் புரியாது அழுதாள்!

சிறிது நேரத்தில் காளிமுத்துவை அழைத்துக் கொண்டு அவன் வருவதைக் கண்டதும் மகிழ்ந்தாள்! குமாரின் முகம் பார்ப்பதற்கே மிகவும் பயங்கரமாக விருந்தது. வாயிற்படியில் ஏறியதும் அவன் சோர்ந்து சுயநினைவு அற்றுவிழுந்துவிட்டான். வேணி கதறினாள். என்ன ஆபத்து இனி நேர இருக்கிறதோ என்றெண்ணி நடுங்கினாள்! காளிமுத்து உள்ளே ஓடி தண்ணீர் கொண்டுவந்து அவன் முகத்தில் தெளித்தான். குமார் கண்களைத் திறந்து பார்த்து விட்டு, திரும்பவும் மூடிக்கொண்டான்.

"காளிமுத்து, என்ன கூறி உன்னை இங்கு அழைத்துக் கொண்டுவந்தார்?"

"ஓடிவா காளிமுத்து என்று கூறினார் அம்மா! நான் அவர் பின்னடியே ஓடோடியும் வந்தேன்! அவ்வளவுதான்!"

வேணி யோசனை செய்தாள். "ஆமாம், அதற்காகத்தான் இவனை அழைத்துக் கொண்டு வந்திருப்பார்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள்.

"காளிமுத்து! சிங்கார நகருக்குச் சென்று உடனே ஒரு வாடகை காரை அழைத்துக்கொண்டுவா! இப்பொழுதே மலர்புரிக்குப் புறப்பட வேண்டும்! வேகம் வேகமாக ஓடு! மிக விரைவாகத் திரும்பிவா! புறப்படு" என்று வேணி கூறியதும், காளிமுத்து கொட்டும் மழையில் நனைந்துகொண்டே ஓடினான்.

சிங்கார நகரிலிருந்து சிறியதான ஒரு கார் வேணியின் வீட்டின் முன் வந்து நின்றது! காளிமுத்து உள்ளே சென்றான்.

"காளிமுத்து! அத்தானை மெதுவாகத் தூக்கிக் கொண்டுபோய் காரில் படுக்கவை! இதோ நானும் வந்துவிடுகிறேன்" என்று வேணி கூறியதும், காளிமுத்து கட்டிலில் சோர்ந்து படுத்துக் கொண்டிருந்த குமாரைத் தூக்கப்போனான்.

"காளி! என் மயக்கம் தெளிந்துவிட்டது! நடந்தே வருகிறேன்!" என்று குமார் கூறிக்கொண்டே தள்ளாடித் தள்ளாடி நடந்து காரில் ஏறினான். வேணியும் ஏறினாள்! கார் காற்று வேகத்தில் பறந்தது! அன்று மாலை மலர் புரியை அடைந்தது!

படுத்த படுக்கையாக கட்டிலில் கிடந்தாள் குமுதம். அவளருகே நீர் ஒழுகும் கண்களோடும், தேம்பும் குரலொலியோடும் வையாபுரி நின்று கொண்டிருந்தார். வைத்தியர்கள் தங்களாலான சிகிச்சைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். விஷமும் வேகமாக அவள் உடலில் வேலை செய்து கொண்டிருந்தது!

"குமுதம் குமுதம்" என்று துக்கம் நிறைந்த குரலில் அழைத்துக் கொண்டே. குமார் ஓடோடியும் அறையினுள் வந்தான். குமுதமிருந்த கோரமான நிலைமையைக் கண்டதும் கோவெனக் கதறி அழுதான். வேணியும் தேம்பி அழுதாள். குமுதம் கண்களை மூடிக் கொண்டே இருந்தாள்!

"குமுதம்! குமுதம்! உன் அத்தான் வந்திருக்கிறேனே! என்னைப்பார்! கண்ணே! ஒரு தரம் கண் திறந்து பார்! இந்த வஞ்சகனின் முகத்தில் விழிக்கக் கூடாதென்று இறுக உன் இரு கண்களையும் மூடிக் கொண்டாயா? அய்யோ!" என்று குமார் தேம்பித் தேம்பி அழுதுகொண்டே கூறினான்.

குமுதம் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள். "வந்துவிட்டீர்களா, அத்தான்?" என்று ஈனக்குரலால் ஆவலோடு அழைத்தாள். அவள் கண்களில் கண்ணீர்

நிறைந்தது. அதனை அன்போடு வேணி துடைத்தாள்.

“ஆமாம்! ஆமாம்! வந்துவிட்டேன்! குமுதம், உன் அன்பின் உயர்வை அறியாமல் போன அற்பன் நான்! காதலின் புனிதத் தன்மையை அறியத் தவறிய கசடன்!”

“வேண்டாம் அத்தான்!...... அத்தான், என்னை நம்புங்கள், நான் அபலை!”

“உண்மை, உண்மை, முற்றும் உண்மை, நீ அபலைதான்! தூய உன் உள்ளத்தைப் புண்படுத்திய நானே மோசக்காரன்! நானே துரோகி!......

“நான் அபலை என்றீர், அது போதும் என் மன ஆறுதலுக்கு! இப்பொழுதுதான் அத்தான் என் மனப்புயல் ஓய்ந்து மனத்தென்றல் வீசுகிறது... ...”

“என் மனப்புயல் தணியவில்லையே கண்ணே!......”

“அத்தான், இவள் வேணியா?”

“ஆமாம், அக்கா, நான்தான் வேணி! உங்கள் காதலை வெட்டிப் பிரிக்கவந்த காதகி.. ...”

“அல்ல! நீயல்ல வெட்டிப்பிரித்தது......வேணி! அத்தானை நீ மணந்து......” இதற்குமேல் குமுதம் பேச முடியாமல் தத்தளித்தாள்! அவள் நாக்குழறியது! கண்கள் மூடிக்கொண்டன! வாயினின்றும் குபுகுபுவென இரத்தம் வெளியே கொட்டியது! உதடுகள் “அத்தான் அத்தான்” என்று இரண்டு முறை முணுமுணுத்துவிட்டு அசைவற்று நின்றுவிட்டன! “குமுதம் குமுதம்” என்று தலையில் அடித்துக்கொண்டு கதறினர் வையாபுரி!

“அய்யோ! அய்யோ! கண்ணே! என் உயிரே!” என்று கதறி அழுதான் குமார்! “அக்கா அக்கா” என்று தேம்பித் தேம்பி அழுதாள் வேணி!

இரவு! உலகை இருள் கவ்விக்கொண்டிருந்தது! அறையில் குமுதத்தின் பிணம் கிடந்தது! அறையைவிட்டு துக்கம் தாங்கமாட்டாது வெளியில் சென்றான் குமார். தேம்பும் குரலில் அத்தான் என்று அழைத்துக்கொண்டே பின்தொடர்ந்தாள் வேணி!

“மனப்புயல்! மனப்புயல்!” என்று வாய்விட்டு வெறுப்பும் மிதமிஞ்சிய சோகமும் கலந்த குரலில் குமார் கூறினான். கால்சிலம்பு பாட, கன்னி அருகில் சென்றாள்.

“ஆசைக் குமுதத்தைக் கொன்றேனே பாவி!”— கவலை தோய்ந்த அவன் நெஞ்சிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் இவை.

“அத்தான்! அக்காவைக் கொன்றது நீங்களல்ல, நான்!” —வேணி கூறினாள் மெதுவான குரலில்.

“வேணி!”

“அத்தான்!”

“குமுதம் மட்டும் செத்துப் போகவில்லை வேணி, நானும்தான் செத்துவிட்டேன்... ..”

“அத்தான்! நான் மட்டுமென்ன வாழ்கிறேன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்! அக்காவின் கடிதத்தைப் பார்த்தபோதே என் வாழ்வு செத்துப் போய்விட்டதே!”

பதில் கூறவில்லை குமார். என்ன இருக்கிறது கூற!

[மனப்புயல் முற்றிற்று]

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)


லாமே தவிர, நமக்கே போதாததாக இருக்கும்போது எப்படி நாம் ஏற்றுமதி செய்ய முடியும்? அப்படி ஏற்றுமதி செய்தால், அது, தன் வயிற்றை பட்டினி போட்டு பட்டினி போடுவதால் மிச்சமாகும் உணவுப்பொருளை இருட்டுச் சந்தையில் எட்டு மடங்கு விலையில் விற்கும் உலுத்தனின் உதவாக்கரைச் செயல்போன்றதாக அல்லவோ வந்துமுடியும்!

சொந்த நாட்டு மக்களுக்கு தேவைக்கும் குறைவாக இருக்கும் இந்த ஒரு சந்தர்ப்பத்தைத் தவிர வேறு எல்லா சந்தர்ப்பங்களிலும் ஏற்றுமதியை அதிகமாக்குவதுதான் ஒரு நாட்டின் சர்க்கார் நியாயமாகச் செய்யவேண்டிய காரியம்; அதிகமாக்கினால்தான் உலக மார்க்கட்டில் அந்த நாட்டிற்கு நல்ல செல்வாக்கும் உலகத்தார் உள்ளத்தில் அந்த நாடு மிகுந்த பலமுள்ள நாடு என்ற எண்ணமும் தோன்றும்.

ஆனால் அண்ணல் மகாத்மாவின் அருமை சீடர்கள் என்று சொல்லிக்கொண்டு நாடாள வந்துள்ள ‘நல்லறிவாளர்”களோ, இந்தப் பொருளாதார பாலபாடத்தின் அகரவரிசையைக்கூட அறியாமல் நாட்டின் பொருளாதார இயந்திரத்தைத் தவறாகக் கையாண்டு, தங்கள் கைவிரல்களை நசுக்கிக்கொண்டிருக்கிறார்கள். தங்கள் கை விரல்களை நசுக்கிக்கொண்டிருப்பது மட்டுமல்ல, தென்னாட்டில் உள்ள இலட்சக் கணக்கான கைத்தறி நெசவாளர்களின் குடும்பப் படகுகளையெல்லாம் பாழும் பட்டினி என்னும் பெருங்கடலில் குப்புறக் கவிழ்ந்து வீழ்ந்து மூழ்கிப் போகும்படி செய்துவிட்டிருக்கிறார்கள்—அவர்கள் உழைத்து உழைத்து அந்த உழைப்பின் பலன் கொண்டு உருவாக்கியிருக்கும் ஜவுளிகளை வேற்றுநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று தடை உத்தரவு பிறப்பித்துவிட்டார்கள். சர்க்கார் பிறப்பித்த தடை உத்திரவு அந்தப் பாட்டாளிகளின் வாழ்க்கையில் எல்லாம் வேதனையைப் பிறப்பித்துவிட்டது; ஏன் பிறந்தோம் இந்த உலகத்தில் என்றெண்ணும் விபரீதத்தைப் பிறப்பித்துவிட்டது; இனியும் நாம் வாழ வேண்டுமா வாழ்வதென்பதற்கு ஓர் பொருள்தான் உண்டா இனி என்று அவர்கள் பெருமூச்சுடன் புகலும் பரிதாப நிலைமையைப் பிறப்பித்துவிட்டது. இந்த சோகமும் சோர்வும் வேதனையும் விம்மலும் கண்ணீராக வழிந்து அவர்களின் கன்னங்களை நனைக்கும்போது, அவர்களின் குழந்தைகள் பசியால் துடிதுடித்து “அம்மா, பசி! பசி!’ என அலறும்போது, அந்த அழுகுரல் கேட்டு ஆற்றாத அன்னையின் உள்ளமும் உடலும் நடுங்கிட அவள் கண்களில் கண்ணீர் குளமெனத் தேங்கும்போது, அந்தோ, அந்த பாட்டாளிகளின் உள்ளத்தில் என்னென்ன எண்ணங்கள் அலைமோதுமோ, யார் அறிவார்!

சர்க்கார், இவ்வளவு வேதனையை உண்டுபண்ணும் இந்த ஏற்றுமதித் தடைக்கு என்னதான் காரணம் கூறுகின்றனர்? ஜவுளிகள் இங்குள்ளோருக்கே போதவில்லை ஆகவே ஏற்றுமதி கூடாது என்று கூறுகின்றனர். ஆம்! அதைத் தவிர அவர்கள் வேறென்ன கூறமுடியும்? ஏற்றுமதித் தடைக்கு ஒரு சர்க்கார் கூறக்கூடிய ஒரே ஒரு சமாதானம் இதுதானே!

ஆனால் இந்திய சர்க்கார் கூறும் இந்த சமாதானத்தில்—அதாவது இந்தியாவில் உற்பத்தியாகும் ஜவுளிகள் இந்தியருக்கே போதவில்லை, ஆகவே ஏற்றுமதிக்குத் தடை விதித்துவிட்டோம் என்றுரைக்கும் பொய்க் கூற்றில், ஏதேனும் உண்மை உண்டா? கிடையாது! துளியளவும் கிடையாது!




இதோ நான்கு படங்கள்! இந்தப் படங்களைப் பார்க்கும் எவரும் எளிதில் உணர்ந்துகொள்வர் சர்க்காரின் கூற்று எவ்வளவு தவறானது என்பதை!

இதோ இந்த முதல் படம் இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த கைத்தறி ஜவுளிகள் எவ்வளவு என்பதைக் காட்டுகிறது. இரண்டாவது படம், **சர்க்கார் கணக்குப்படி**, இந்த கைத்தறி ஜவுளிகளில் மக்களுக்குத் தேவையான, மக்களால் விலைகொடுத்து வாங்கப்படுகின்ற கைத்தறி ஜவுளிகள் எவ்வளவு என்பதைக் காட்டுகிறது. முதல் படத்தைப் பாருங்கள். முதல் படத்தில் இருப்பதைவிட இரண்டாம் படத்தில் மூட்டைகள் குறைவாக இருக்கக் காண்பீர்கள். சந்தேகமாக இருக்கிறதா? சரி! அப்படியானால் எண்ணிப் பாருங்கள்!

எண்ணிவிட்டீர்களா?

மிகவும் நல்லது. முதல் படத்தில் எத்தனை மூட்டைகள் இருக்கின்றன?

15!

இரண்டாவது படத்தில்....

12!

ஆக, முதல் படத்தைவிட இரண்டாவது படத்தில் 3 மூட்டைகள் குறைவாக இருக்கின்றன அல்லவா?

ஆம்!

ஆம்! முதல் படத்தைவிட இரண்டாவது படத்தில் 3 மூட்டைகள் குறைவாக இருக்கின்றன. அதாவது இந்தியாவில் மொத்தம் உற்பத்தியாகும் கைத்தறி ஜவுளிகள் 15 மூட்டைகள் என்று சொன்னால் இங்குள்ள மக்கள் கேட்பது 12 மூட்டைகளைத்தான் ஆக 3 மூட்டைகள் மக்களுக்குத் தேவையில்லாமல் தங்கிவிடுகின்றன. மூன்றாவது படத்தில் உள்ள 3 மூட்டைகள் இந்த உண்மையைத்தான் புலப்படுத்துகின்றன. இந்த உண்மை முதல் இரு படங்களை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பார்த்தாலே நன்கு தெரிகிறதே இதற்குத் தனியாக ஒரு படம் போடுவானேன் என்று நீங்கள் கேட்கலாம். கேள்வி நியாயமானதுகூட! "**முதல் படம் — மொத்த உற்பத்தி, 15 மூட்டைகள்; இரண்டாம் படம்—தேவைப்படுவது, 12 மூட்டைகள், ஆக 15 லிருந்து 12 போக மிச்சமிருப்பது 3 மூட்டைகள்**" என்ற உண்மை நம்மைப்போன்ற சாமானியர்களுக்கு எளிதில் புலப்படத்தான் செய்யும்: ஆனால் இந்த காங்கிரஸ் சர்க்காருக்கோ இத்தகைய சாமானிய சங்கதிகளும் சுலபத்தில் புரிவதில்லை—ஆகவேதான் மூன்றாவது தனிப் படம்! அது சர்க்காருக்காக! நமக்கல்ல!

நல்லறிவும் நாகரிகமுமுள்ள எந்த சர்க்காரும், மிச்சமாக இங்கே தேங்கிக் கிடக்கும் இந்த மூன்று மூட்டைகளையும் இந்த கைத்தறி ஜவுளிகள் தேவை தேவை என்று துடிதுடித்துக் கொண்டிருக்கும் பாகிஸ்தான் மலேயா பர்மா போன்ற பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகளை, தானே முன்னின்று செய்து வைக்கும். ஆனால் இந்த சர்க்காரோ, ஏற்றுமதி, விரைவாகவும் ஒழுங்காகவும் நடைபெறுவதற்கான வசதிகளையும் சூழ்நிலையையும் உண்டுபண்ணித் தரவில்லை என்பதுமட்டுமல்ல, ஏற்றுமதியே கூடாது என்றும் தடுத்துவிட்டார்கள். ஏற்றுமதியே கூடாது என்று தடுத்துவிட்டதோடும் நிற்க

(4-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)